# මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
# நிதி, திட்டமிடல் அமைச்சு
# MINISTRY OF FINANCE AND PLANNING

| | | |
|---|---|---|
| මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka |
| කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823 | වෙබ් අඩවිය / வெப்சைட் / Website: www.treasury.gov.lk |
| මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date: 2013.08.02 |


வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல : 01/2013

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் யாவருக்கும்.

## சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல்

2010.12.10 ஆந் திகதிய வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல: 01/2010 மற்றும் அதன் மீதான திருத்தங்கள் மூலம் அரச சேவையில், அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றில் கடமையாற்றும் நிறைவேற்று நிலையிலான நிருவாக, முகாமைத்துவ அலுவலர்கள் மற்றும் தொழில்சார் பதவிகளை வகிக்கும் அலுவர்களுக்கு சலுகை நிபந்தனை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அல்லது புதிய பாகங்கள் மற்றும் உதிரிப் பாகங்களைப் பொருத்தி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடைமுறை 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறுகின்றது.

மேற்குறித்த சுற்றறிக்கை மற்றும் அதன் மீதான திருத்தங்களில் அடங்கியுள்ள சலுகைகள் என்பனவற்றை உள்ளடக்கி, இந்த 01/2013 புதிய சுற்றறிக்கை வெளியிடப்படுவதுடன், அது 2013.08.05 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறுகின்றது. அதன் பிரகாரம் , 2010.12.10 ஆந் திகதிய 01/2010, 2010.12.24 ஆந் திகதிய 01/(01)2010, 2012.02.13 ஆந் திகதிய 01/(02)/2010, மற்றும் 2012.11.09 ஆந் திகதிய 01/(03)/2010 சுற்றறிக்கைகள் யாவும் இத்தினம் முதல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

01 தகைமை

01.01 இச் சுற்றறிக்கையின் நிபந்தனைகள் மற்றும் நியதிகள் என்பனவற்றிற்கு அமைய வரிச் சலுகை அடிப்படையில், மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் பெற உரிமை கோர தகுதியான அலுவலர்கள்.

(அ) 2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல: 06/2006 இல் குறிப்பிடப்படும் "சிரேஷ்ட நிலை" நிறைவேற்றுப் பதவியொன்றில் தொடர்ந்தேர்ச்சியான ஆறு வருட (06) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள, பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள பதவி நிலை அலுவலர்கள்.

(ஆ) "சிரேஷ்ட நிலை" நிறைவேற்றுப் பதவியொன்றில் தொடர்ந்தேர்ச்சியான ஆறு வருட (06) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள ,இலங்கைப் பாராளுமன்ற சேவையிலுள்ள அலுவலர்கள்.

(இ) அரசியலமைப்பின் மூலம் விதந்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்றில் தொடர்ந்தேர்ச்சியாக மூன்று வருட (03) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள ஆணைக்குழுவின் தவிசாளர்களும் உறுப்பினர்களும்.

(ஈ) அமைச்சரவையின் தீர்மானத்தின் பேரில் அரச நிறுவனங்களில் "சிரேஷ்ட நிலை" நிறைவேற்றுப் பதவியொன்றில் நியமிக்கப்பட்டுள்ள, அப்பதவியில் தொடர்ந்தேர்ச்சியான ஆறு வருட (06) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள்.

(உ) i பல்கலைக்கழக வேந்தர்கள்

ii பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா பணிக் குழாம்களில் "சிரேஷ்ட நிலை" பதவியொன்றில் தொடர்ந்தேர்ச்சியான எட்டு வருட (08) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள, குறித்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

(ஊ) i தொடர்ந்தேர்ச்சியான ஆறு வருட (06) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள , பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள முப்படைகளின் லெப்டினனட் கேர்ணல், விங் கமாண்டர் , கமாண்டர் அல்லது அதனை விட உயர்ந்த பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

ii முப்படைகளில் சேவைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தொடர்ந் தேர்ச்சியான ஆறு வருட (06) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள , பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள வைத்தியர்கள, பொறியியலாளர்கள், கணக்காளர்கள் கட்டடக் கலைஞர்கள் மற்றும் சட்டத்தரணிகள் (இராணுவப் பதவியினைக் கருத்திற்கொள்ளாது)

(எ) பதவி நிலைப் பதவியொன்றில் தொடர்ந்தேர்ச்சியான பன்னிரெண்டு வருட (12) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் III ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேலான வகுப்பொன்றில் பதவி வகிக்கும் இலங்கை மத்திய வங்கியின் "சிரேஷ்ட நிலை" நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் முகவர் நிறுவனங்களில் "சிரேஷ்ட நிலை" நிறைவேற்றுப் பதவியொன்றில் தொடர்ந்தேர்ச்சியான பன்னிரெண்டு வருட (12) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள்.

(ஏ) i அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றில் "சிரேஷ்ட நிலை" நிறைவேற்றுப் பதவியொன்றில் தொடர்ந்தேர்ச்சியான பன்னிரெண்டு வருட (12) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள, குறித்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

ii அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றில் "சிரேஷ்ட நிலை" நிறைவேற்றுப் பதவியொன்றில் தொடர்ந்தேர்ச்சியான ஒன்பது வருட (09) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள, குறித்த பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள பட்டயப் பொறியியலாளர்கள், பட்டயக் கணக்காளர்கள் மற்றும் பட்டயக் கட்டடக் கலைஞர்கள்.

(ஒ) தொடர்ந்தேர்ச்சியான ஒன்பது வருட (09) சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள, அரசாங்க அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள கருத்திட்டப்

பணிப்பாளர்கள், பட்டயப் பொறியியலாளர்கள், பட்டயக் கட்டடக் கலைஞர்கள், மற்றும் சட்டத்தரணிகள்

(ஓ) இச்சுற்றறிக்கையின் பயன்பாட்டிற்காக ``தொடர்ந்தேர்ச்சியான சேவைக் காலம்`` என்பதன் மூலம் நாடப்படுவது மேற்குறித்த நோக்கத்திற்காக தகுதி பெறுகின்ற பதவியொன்றிலுள்ள அலுவலரது சேவைக் காலமானது, பணித் தடைக்கு உட்பட்டு அல்லது சம்பளமற்ற விடுமுறை (பட்டமேற்படிப்பு கற்கைக்கான விடுமுறை தவிர்த்து) இனைப் பெற்றுக் கொண்ட அல்லது குறித்த பதவிக்காக நியமனம் பெறுவது முன்திகதியிடல் திகயினை அடிப்படையாக் கொண்டமைந்த சேவைக் காலம் எனில் அவற்றினைக் கருத்திற் கொள்ளாது, கணிப்பீடு செய்யப்படுகின்ற சேவைக் காலமாகும்.

01.02 தகைமை பெறாத விசேட சந்தர்ப்பங்கள்:

i விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் திகதிக்கு உடன் முந்திய ஐந்து (05) வருட காலப்பகுதியினுல் வரிச் சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனம் ஒன்றினை இறக்குமதி செய்து அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றினைக் கொள்வனவு செய்துள்ள அலுவலர்கள் (இங்கு ஐந்து (05) வருட காலம் கணிக்கப்படுவது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றாயின் அதற்குரிய நாணயக் கடிதம் திறக்கப்பட்ட தினத்திலிருந்தும், உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றாயின் அதன் முதலாவது கொடுப்பனவு செய்யப்பட்ட தினத்திலிருந்துமாகும்)

ii தற்போது சம்பளமற்ற விடுமுறையில் விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

iii இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் தகைமை பெறும் பதவியொன்றுக்கு அல்லது சிரேஷ்ட நிலை சம்பள முறைமைக்கு தனிப்பட்ட முறையில் அல்லது விசேட நியமன அடிப்படையில் நிய மிக்கப்பட்டு சம்பளம் வழங்கப்படுபவர்கள் அல்லது அலுவலர்கள்.

iv அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் தகைமை பெற்ற பதவியொன்றில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்.

v எவரேனும் அலுவலர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இற்றை வரை முடிவுறுத்தப்படாத நிலையிலுள்ள அத்தகைய அலுவலர்கள்.

vi ஏதேனும் ஒரு வரிச்சலுகையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்து பின்னர் மீண்டுமொரு அனுமதிப்பத்திரமொன்றுக்காக விண்ணப்பிக்கும் போது கிட்டிய இறக்குமதியிலிருந்து ஐந்து (05) வருட தொடர்ந்தேர்சியான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்யாத நிலையிலுள்ள அலுவலர்கள்.

**02. நியந்தனைகள், நியதிகள் மற்றும் சலுகைகள்**

**02.01 நிபந்தனைகள் மற்றும் நியதிகள்**

(அ) i. இம்முறைமையின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய பெறுமதி (சீஐஎவ் பெறுமதி) க்குள் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்ய அல்லது கொள்வனவு செய்ய முடியும்.

| நாணய அலகு | கா, கி, கே (சீஐஎவ்) பெறுமதி | | |
|---|---|---|---|
| | நிரல் (1) | நிரல் (2) | நிரல் (3) |
| ஐ.அ.டொலர் | 25,000 | 30,000 | 35,000 |
| யென் | 2,100,000 | 2,520,000 | 2,940,000 |
| யூரோ | 20,000 | 24,000 | 28,000 |
| ஐ. இ. பவுண் | 16,000 | 19,200 | 22,400 |
| இந்திய ரூபா | 1,300,000 | 1,560,000 | 1,820,000 |

அட்டவணை 2.1

ii. மேலே அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ள உச்ச கி,கா,க (சீஐஎவ்) பெறுமதியினை விஞ்சி இம்முறையின் கீழ ஏதேனுமொரு மோட்டார் வாகனம் இறக்குமதி செய்யப்படும் பட்சத்தில் அது சாதாரண இறக்குமதியாக கருதப்படுவதுடன் (எதுவித வரிச் சலுகையுமின்றி) இறக்குமதியுடன் தொடர்புற்ற அனைத்து வகை வரிகளும் மற்றும் அறவீடுகளும் இலங்கைச் சுங்கத்தினால் அறவீடு செய்யப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரதாரருக்கு வாகனமொன்றினை இறக்குமதி செய்வதற்கான மற்றுமொரு அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. மேலும் இச்சுற்றறிக்கையை மீறியமை தொடர்பாக தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

iii. மேலே கா,கி,கே (சீஐஎவ்) பெறுமதியின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற மோட்டார் வாகனமொன்றுக்காக இலங்கைச் சுங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி பெறுமளவில் வேறுபடும் பட்சத்தில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்த முகவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அத்தகைய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பயனாளிக்கும் எதிர்காலத்தில் மீண்டுமொரு அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

iv. மேற்படி 2.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாணய அலகிற்கு புறம்பாக ஏனைய நிதி அலகுகளின் கீழ் மோட்டார் வாகனமொன்று இறக்குமதி செய்யப்படின், அதற்காக 2013.08.05 ஆந் திகதி நிலவிய நாணய மாற்று விகிதம் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) (i) இம்முறைமையின் கீழ் புதிய (Brand New) அல்லது ஒரு வருடத்துக்கு மேற்படாத இயைபு முறை பட்டியல் குறியீட்டு இலக்கம் 87.03 இன் கீழ் வரும் கார், ஜீப், ஸ்டேசன் வெகன் மற்றும் கெப் ரக வாகனங்கள் என்பனவற்றினை மாத்திரம் இறக்குமதி அல்லது கொள்வனவு செய்ய முடியும்.

(ii) பாவிக்கப்பட்ட வாகனம் இறக்குமதி செய்யப்படும் போது குறித்த வாகனத்தின் ஒரு வருட பாவனைக் காலம் எனக் கருதப்படுவது 2010.11.22 ஆந் திகதிய 1681/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது போன்று வாகனம் முதன்முதலாக பதிவு செய்யப்பட்ட திகதி மற்றும் கப்பலேற்றப்பட்ட திகதி என்பனவற்றிற்கு இடையேயான காலப்பகுதியாகும்.

(இ) இம்முறையின் கீழ் இறக்குமதி செய்யப்படும்/ கொள்வனவு செய்யப்படும் மோட்டார் வாகனம் எத்தகைய சந்தர்ப்பத்திலும் மற்றுமோர் தரப்பினருக்கு கைமாற்றலாம்.

(ஈ) இம்முறையின் கீழ் வாகன இறக்குமதிக்கு அல்லது கொள்வனவிற்கு தகுதி பெறும் ஓர் அலுவலர் அவர் வகிக்கும் பதவிகளின் எண்ணிக்கை இந்நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் மோட்டார் வாகனமொன்றினை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கான உரிமையினைப் பெறுவார்.

(உ) வாகன இறக்குமதிக்காக அல்லது கொள்வனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மைக்கு புறம்பானது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுவதுடன் அதனோடு தொடர்புற்ற அனைத்து வகை வரிச்சலுகைகளையும் அரசாங்கத்திற்கு மீளச் செலுத்துதல் வேண்டும். மேலும் உண்மைக்கு புறம்பான தகவல்கள் வழங்கியமை தொடர்பில் தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) இவ்வனுமதிப் பத்திரம் அது விநியோகிக்கப்பட்ட திகதி முதல் ஒரு வருட காலம் வரை பயன்வலுப்பெறும். நியாயமான காரணமொன்றின் பேரில் குறித்த காலப்பகுதியினுள் நாணய கடிதமொன்றினை திறப்பதற்கு முடியாமற் போகும் பட்சத்தில் அத்தகைய அனுமதிப் பத்திரத்திற்காக மேலும் ஆறு (06) மாதங்களுக்கு காலநீடிப்பு வழங்கப்படும். (அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாவதற்கு முன்னர் அதனை நீடிப்புச் செய்து கொள்வது கட்டாயமானதாகும்)

(எ) இம்முறைமையின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் அதன் பயன்வலுப்பெறு காலம் முடிவடைவதற்கு முன்னர் அல்லது மோட்டார் வாகன இறக்குமதிக்காக நாணய கடிதம் திறக்கப்பட்ட திகதியின் பின்னர் அல்லது குறித்த மோட்டார் வாகனம் கப்பலேற்றப்பட்டதன் பின்னர் அனுமதிப்பத்திரதாரர் மரணமடைவாராயின், அவ்வனுமதிப் பத்திரத்தின் சட்டரீதியான உரிமையினை அவரது வாழ்க்கைத் துணை (கணவன் அல்லது மனைவி) பெறுவர்

02.02 வரி

(அ) கீழே 2.2 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனத்தின் சிலிண்டர் கொள்ளளவு மற்றும் கி.கா.கே (சீ.ஐ.எவ்) பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு வரிக் கணிப்பீடு மேற்கொள்ளப்படும். பெறுமதி சேர் வரி (VAT) துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL), தேச கட்டுமான வரி (NBT) என்பன உள்ளடங்களாக அனுமதிப்பத்திரதாரரினால் செலுத்தப்பட வேண்டிய மொத்த வரித் தொகைக்கு பொருந்தக் கூடிய வகையில் உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி மற்றும் சுங்க வரிச் சீராக்கல்கள் இலங்கைச் சுங்கத்தினால் மேற்கொள்ளப்படும்.

| சிலிண்டர் கொள்ளளவு (பெற்றோல்/டீசல்) | அட்டவணை 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கா, கி, கே (சீஐஎவ்) பெறுமதி மீது செலுத்தப்பட வேண்டிய வரி வீதம் | | | |
|---|---|---|---|---|
| | நிரல் (1) | நிரல் (2) | நிரல் (3) | நிரல் (3)இல் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச பெறுமதியை விஞ்சுதல் |
| 1000cc | 60 | 75 | 90 | |
| 1600cc | 65 | 80 | 100 | எதுவித வரிச் சலுகைக்கும் உரிமை பெறாததுடன் சாதாரண இறக்குமதி என கருதப்பட்டு வரி அறவீடு செய்யப்படும். |
| 2000cc | 70 | 100 | 125 | |
| 2600cc | 80 | 110 | 135 | |
| 2600cc இற்கு மேல் | 100 | 125 | 150 | |

அட்டவணை 2.2

(ஆ) 2013.08.05ஆந் திகதிக்கு முன் நாணய கடிதம் திறக்கப்பட்டுள்ள அனுமதிபத்திரதாரர்களுக்கு அட்டவணை 2.1 மற்றும் 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் ஏற்புடையதாகாது.

03. செயற்பாட்டு நடைமுறை

(அ) இந்நடைமுறையின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றினை பெற்றுக் கொள்வதற்கான தகைமையினை பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் மாத்திரம் இச்சுற்றறிக்கையின் இணைப்பு 1 இல் உள்ள விண்ணப்பப்படிவம் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் (கணனி

மயப்படுத்தப்படுவதனை இலகுபடுத்துவதற்காக விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்)

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் குறித்த திணைக்களத் தலைவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(i) முதன்முறையாக அனுமதிப் பத்திரமொன்றுக்காக விண்ணப்பிக்கும் போது குறித்த பதவிக்காக நியமனம் பெற்ற மற்றும் நிரந்தரமாக்கப்பட்ட கடிதம்.

(ii) இரண்டாம் தடவையாக அல்லது அதற்குப் பின்னரான ஒவ்வொரு தடவையிலும் அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது வரிச் சலுகையின் கீழ் மோட்டார் வாகனமொன்றினை இறக்குமதிச் செய்வதற்காக இறுதியாக திறக்கப்பட்ட நாணய கடிதத்தின் பிரதியொன்று அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமாயின் அதன் முதற் கொடுப்பனவு பற்றுச்சீட்டின் பிரதியொன்று

(iii) நாணய கடிதம் ஒன்றின் பிரதியொன்றினை சமர்ப்பிக்க முடியாதவிடத்து குறித்த மோட்டார் வாகனத்தின் சுங்க குறிப்பேடு (CUS DEC) அல்லது மூலப்பதிவுச் சான்றிதழ் ஒன்றின் பிரதியொன்று.

(இ) அனுமதிப்பத்திரமானது அனுமதிப்பத்திரதாரரினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுகின்றது. ஆதலால், அதிலுள்ள தரவுகளின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே திணைக்களத் தலைவர்களினால் அனுமதிப்பத்திரத்தின் மீது தனிப்பட்ட முறையில் விதிப்புரைப்பு செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) குறித்த திணைக்களத் தலைவரினால் விதிப்புரைக்கப்பட்டு சமர்பிக்கப்படும் விண்ணப்படிவங்கள் தொடர்பில் உரிய அமைச்சின் செயலாளர்கள் அல்லது மாகாண சபையின் பிரதம செயலாளர்களினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தினதும் பிரதியொன்று பணிப்பாளர் நாயகம் - வியாபாரம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், பணிப்பாளர் நாயகம் - இலங்கைச் சுங்கம், ஆணையாளர் நாயகம் - மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் என்பனவற்றிற்கு காலதாமதமின்றி அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். என்பதுடன் அதன் பிரதியொன்று குறித்த அலுவலரின் சுயவிபரக்கோவையிலும் கட்டாயமாக கோவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

04 ஏனைய விடயங்கள்

(அ) இச்சுற்றறிக்கையின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெறும் பதவிகள் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பில் பொருட்கோடல்கள், மேலதிக விளக்கங்கள் மற்றும் தெளிவற்ற நிலமைகள் தொடர்பாக ஏதும் முரண்பாடுகள் ஏற்படின் அது தொடர்பில் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்ளல் வேண்டும் என்பதுடன் அதிலுள்ள விடயங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அது தொர்பில் பொதுத் திறைச்சேரியின் பிரதி செயலாளரொருவருக்கு முன் வைக்கப்படும் சிபாரிசின் பேரில் குறித்த சலுகை வழங்குதல் தொடர்பில் திறைச்சேரி செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ஆ) இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு ஏற்ப தகைமை பெறும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது சகல அமைச்சுக்களின் செயலாளர்களது அல்லது மாகாண சபை பிரதம செயலாளர்களது பொறுப்பாகும்.

(இ) இம்முறையின் கீழ் பெருமளவு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுதல் மற்றும் அதற்கான வரிச் சலுகையின் மூலம் அரச சேவையில் மறைமுக ரீதியிலான

ஊக்குவிப்பு எதிர்பார்க்கப்படுவதனால் மூன்று (3) மாதங்களுக்கு ஒரு முறை இம்முறையின் கீழ் இலங்கைச் சுங்கத்தினால் விடுவிக்கப்படும் வாகனங்களுக்குரிய தகவல்கள் முகாமைத்துவ கணக்காய்வுக்கு உற்படுத்தப்படும்.

(ஈ) அரச உத்தியோகத்தர்களுக்கு தாம் வகிக்கும் பதவிகளுக்கேற்ப வரிச்சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இடமளிப்பது அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அளிக்கப்பட்டுள்ள ஒரு வரப்பிரசாதமாகும். உத்தியோகத்தரின் தேவைக்கேற்ப அனுமதிப்பத்திரத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தை பிறிதொருவருக்கு கைமாற்றுவதில் நிருவாக ரீதியலான தடை எதுவும் இல்லாதிருப்பினும் அவ்வாறு கைமாற்றும் போது அவ்வனுமதிப்பத்திரத்திற்குரிய நிபந்தனைகள் மீறாதிருப்பதற்கு அனுமதிபத்திரதாரரும் அதுபோலவே கையேற்பவரும் பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வாறு மீறும் சந்தர்ப்பங்களில் நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களுக்கேற்ப அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அரச உத்தியோகத்தர்களின் அனுமதிப்பத்திரங்களை உபயோகித்து மோட்டார் வாகன இறக்குமதியாளர்களினால் செய்யப்படும் ஒழுங்கீனங்களினால் அரச வருமானத்திற்கு ஏற்படும் பாதகமான விளைவுகளை தவிர்த்து இம்முறையினை நடைமுறைப்படுத்துவது இவ்வனுமதிப்பத்திரத்திற்கு உரித்துள்ள சகல அரச உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும்.

ஒப்பம்/ பீ.பி ஜயசுந்தர.
திறைசேரிச் செயலாளர் மற்றும்
நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர்

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவைச் செயலாளர்
4. கணக்காய்வாளர்
5. பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கத் திணைக்களம்
6. ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகண போக்குவரத்துத் திணைக்களம்
7. ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
8. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்.